மாலை முரசு
பக்கங்கள் 15 + 2

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 16 சனிக்கிழமை 02.11.2024 | அதிர்வு 93

## பொகவந்தலாவையில் ஆணின் சடலம் மீட்பு!

நுவரெலியா, பொகவந்தலாவை – கொட்டியாகலை பிரதேசத்தில் உள்ள கால்வாயிலிருந்து இன்று சனிக் கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்





# தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்குமாறு தமிழரசின் பதில் செயலாளரிடம் கையளித்த மாவை

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வுக்குச் சுகயீனம் காரணமாக வர முடியாததால், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்குமாறு பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கத்திடம் விஞ்ஞாபனத்தைக் கையளித்தார். இதன்போது தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்களான, சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், இ.ஆர்னோல்ட் ஆகியோர் உடனிருந்தார்கள்.





# யாழ். தந்தை செல்வா கலையரங்கில் தமிழரசின் விஞ்ஞாபனம் வெளியீடு





(பிரபாகரன் டிலக்சன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு கட்சியின் உப தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இன்று முற்பகல் 11 மணியள வில் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது. 02

## யாழ். தந்தை செல்வா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது தேர்தல் விஞ்ஞாபனத்தின் முதல் பிரதியைக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் வெளியிட்டு வைக்கத் தமிழரசுக் கட்சியின் பிரித்தானியாக் கிளையின் முக்கியஸ்தர் சிவசுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து ஏனைய வேட்பாளர்களுக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரதிகளைக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் வழங்கி வைத்தார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கலந்துகொள்ளாத நிலையில் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் உடல் நிலை காரணமாக வரவில்லை எனக் கூறப்பட்டது. எனினும், முதன்மை வேட்பாளர் பங்குபற்றாமைக்கான காரணம் குறிப்பிடப்படவில்லை.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் உப தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற வேட்பாளர்களான எம்.ஏ.சுமந்திரன், கே.சயத்தன், ச.சுகிர்தன், சி.கிருஷ்ணவேணி, இ.ஆர்னோல்ட், ச.சுரேகா, எம்.சி.சி.இளங்கோவன், தி.பிரகாஷ் மற்றும் ஆதர வாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.


















# அநுரவின் ஆட்சி கவிழும் என பகல் கனவு காணும் ரணில்!

## அமைச்சர் விஜித ஹேரத் சாடல்

"ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான இந்த ஆட்சி மூன்று மாதங்களுக்குள் கவிழும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு கண்டுகொண்டிருக்கின்றார்." – என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

"முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டிய வரப்பிரதாசங்கள் , பாதுகாப்பு எல்லாம் வழங்கப்பட்டுள்ளன. அளவுக்கு அதிகமாக எதையும் வழங்க வேண்டிய தில்லை. 180 இராணுவத்தினர், படையினர் எல்லாம் எதற்கு? தேவையற்ற விடயங்களை வழங்க வேண்டியதில்லை.

இந்த அரசால் பயணிக்க முடியாது என ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு காண்கின்றார். இதற்கு முன்னரும் அவர் கனவு கண்டார். டொலர் 400 ரூபா வரை அதிகரிக்கும் என்றெல்லாம்கூட கூறினார். இன்று டொலர் பெறுமதி குறைவடைந்துள்ளது. கனவு காணும் உரிமை அவருக்கு உள்ளது. நன்றாகக் கனவு காணட்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும் நகைச்சுவைத்தனமான கருத்துகளைக் கூறி வருகின்றார். அவரின் கருத்துக்களை மக்கள் ஏற்கமாட்டார்கள்." – என்றார்.

# ஜனநாயக ஐக்கிய முன்னணி உதயராசா அணிக்கு ஆதரவு

(கி.வசந்தன்)

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடவிருந்த ஜனநாயக ஐக்கிய முன்னணியானது ப.உதயராசாவை முதன்மை வேட்பாளராகக் கொண்ட ஜனநாயகத் தேசியக் கூட்டணிக்குத் தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் ஜாவித் ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாங்கள் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவைத் தாக்கல் செய்திருந்தோம். எனினும், வாக்குகளைச் சிதறடிக்கக்கூடாது என்ற காரணத்துக்காக வெல்லக்கூடிய வேட்பாளர் ஒருவருக்கு எமது ஆதாரவைத் தெரிவிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.




அந்தவகையில் ப.உதயராசாவை முதன்மை வேட்பாளராகக் கொண்ட ஜனநாயகத் தேசியக் கூட்டணிக்கு எமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளோம்.

அவர்களின் வெற்றிக்காக நாம் எமது பகுதிகளில் தொடர்ச்சியாகப் பிரச்சாரங்களை முன்னெடுப்போம்.

அத்துடன் எமது ஆதரவாளர்கள் அனைவரும் தபால் பெட்டிச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தேசியக் கூட்டணிக்கும் அதன் வேட்பாளரான ப.உதயராசாவுக்கும் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்." – என்றார்.

## பொகவந்தலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டியாகலை தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் சிலர் கால்வாயில் சடலம் இருப்பதைக் கண்டு உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

கொட்டியாகலை தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் குழாய்களுக்கு நீர் இணைப்பை வழங்கும் கால்வாயி லிருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொகவந்தலாவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக திக்ஓயா ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்

(எஸ்.நிதர்ஷன்)

வரும் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம் பெறவுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் மாவீரர் நாளுக்கான தயார்படுத்தல்கள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தநிலையில், தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினால் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவுப் பணிகள் இன்று சனிக்கிழமை காலை ஆரம்பிக்கப் பட்டன. இதன்போது பொதுச் சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டு சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

சிரமதானப் பணிகளில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள், சமூகச் செயற்பாட் டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அர்த்தமற்ற குற்றச்சாட்டு

தனது சொந்தக் கட்சியான ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியின் உண்மை முகத்தை மூடி மறைப்பதற்காகத் தமிழரசுக் கட்சி மீதும் அதன் பேச்சாளர் சுமந்திரன் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுகளை சுமத்தி இருக்கிறார் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் சுமந்திரன் ஏதோ புதிதாகக் கருத்தைத் தெரிவித்து இருக்கிறார் என்பது போலவும், தமது கட்சியின் அரசு அந்தச் சட்டத்தை நீக்குவதில் மிக உறுதியாக இருப்பது போலவும் நாடகமாடுகிறார் அவர்.

பேச உரிமையுடையவர்கள் பேசியவற்றை மறைத்து விட்டு, வேறு விதமாக அவர் கதையை அளப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல.

இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் பற்றிய பிரச்சினையை கிளப்பியவர்கள் தமிழரசுக் கட்சியினர் அல்லர்.

காலம் காலமாக - கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக - பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அடியோடு நீக்குவோம் என்று உறுதியாக நின்ற சந்திரசேகரனின் கட்சியினர்தான் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தினார்கள்.

சந்திரசேகரன் சேர்ந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்கப் போவதில்லை என்று தகவலை வெளியிட்டவர் ஜனாதிபதி செயலகத்தின் சட்டத்துறை இயக்குநர் ஜே.எம்.விஜய பண்டார. ஜனாதிபதியின் சார்பில் சட்டத்துறை விவகாரங்கள் பற்றிய தகவல்களை வெளியிடும் அதிகாரமும் தகுதியும் தகமையும் பெற்றவர் அவர்தான். அவரேதான் அந்தத் தகவலைக் கொழும்பில் வெளிப்படையாகக் கூறி இருக்கிறார்.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பிழையொன்றுமில்லை. அது பயன்படுத்தப்பட்டு வந்த விதமே தவறு' - என அவர் புது தத்துவத்தை - உபதேசத்தை - அவர் கட்டவிழ்த்து விட்டமையை அடுத்துத்தான் இந்த விவகாரம் முக்கியத்துவம் பெற்றது.

ஒரு சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட முடியும் என்றால் அந்தச் சட்டமே தவறானது தான், அதில் பிழையேதும் இல்லை என்று இந்த ஜனாதிபதியின் சட்டத்துறை செயலாளர் கூறுவது விநோதமானது. அது வேறு விடயம்.

ஆனால், ஜனாதிபதியின் சட்டத்துறைச் செயலாளர் கூறிய விடயத்தை மூடி மறைத்துக்கொண்டு, ஜனாதிபதி அலுவலக சட்டத்தரணி ஒருவர் கூறினார் எனக் கூறப்பட்டது என்றும், அது அடிப்படை அற்றது என்ற கருத்திலும் சந்திரசேகரன் விளக்கம் கூறமுற்பட்டிருப்பது தமிழர் காதில் பூச்சூற்றும் விவகாரம் ஆகும்.

ஜனாதிபதியின் சட்டத்துறை செயலாளர் அந்தப் பதவியின் நிமித்தம் கூறிய சட்டத்துறை தொடர்பான நிலைப்பாடு, ஜனாதிபதியின் நிலைப்பாடு என்று அர்த்தப்படுத்தப்பட வேண்டியது. அதை மறுப்பதாயின் அவருக்கு எதிராக மறுப்பு கூறுவதை விடுத்து, அந்த விடயத்தை ஒட்டி சுமந்திரன் கூறிய கருத்துக்காக அவர் மீது குற்றம் சுமத்த முனைவது சந்திரசேகரனின் இயலாமையை காட்டும் விடயமாகும்.

ஜனாதிபதியின் சட்டத்துறை செயலாளர் கூறிய விடயத்துக்கு சரியான விளக்கமும், மறுப்பும் ஜனாதிபதி தரப்பிலிருந்து இன்னமும் வரவில்லை. வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் மூடி மறைக்கும் விதத்தில் 'சமாளிவிகேஷன்' அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கிறார். அவ்வளவுதான்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயங்கரவாத தடை சட்டம் குறித்து எந்தவித நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை என்ற அமைச்சர் விஜித ஹேரத்தின் நிலைப் பாடு தான் சரியானது, கட்சியினதும் அரசினுடையதும் என்றால், ஜனாதிபதியின் சட்டத்துறைச் செயலாளரின் கருத்து அதற்கு முரணானதும் தவறானது ஆகும். ஆகவே இந்த விடயத்தில் சந்திரசேகரன் நோக வேண்டியது ஜனாதிபதியின் செயலாளரையே தவிர சுமந்திரனை அல்ல.

ஜனாதிபதியின் சட்டத்துறை செயலாளர் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாகக் குறிப்பிட்டகருத்துஜனாதிபதியினுடையதோ அல்லது அரசினுடையதோ அல்ல என்பதை வெளிப்படையாக மறுக்கத் திராணியற்ற அமைச்சர் விஜித ஹேரத்தும், கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரனும் அதற்கான பொறுப்பை - குற்றச்சாட்டை - சுமந்திரன் மீது சுமத்துவது அர்த்தமற்றது.

ஜனாதிபதியையோ அவரது செயலாளரையோ மறுத்து உண்மையைக் கூறத் தைரியமற்ற சந்திரசேகரன், விடயத்தை மூடி மறைப்பதற்காக 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல' சுமந்திரன் மீது குற்றம் சுமத்துவது அர்த்தமற்றது. அபத்தமானது. அரசியல் அநாகரீகமானது.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தங்கள் அரசு நீக்கும் என உறுதி கூறுகின்றார் சந்திரசேகரன்

(எஸ்.நிதர்சன்)

இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நாங்கள் நீக்குவோம் என்று உறுதி மொழி வழங்கியிருக்கின்றோம். அதனை நிச்சயம் செய்வோம்.

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழிலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எங்கள் மீது வேண்டுமென்றே போலியாக குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசிய ரணில், சஜித் உள்ளிட்ட தரப்பை மக்கள் தூக்கியெறிந்திருக்கிறார்கள். இதனை அத் தேர்தல் முடிவுகள் தெளிவாக எடுத்துக் காட்டியும் இருக்கின்றன.

அதேபோன்று தமிழ் தலைவர்களே நீங்கள் இனியும் தமிழ் மக்களுக்கு தன்னி காட்டுவதற்கு எங்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துவீர்கள் என்றால் அல்லது சேறு பூசுவீரகளாக இருந்தால் தேர்தல் முடிந்ததன் பிறகு நிச்சயமாக நீங்களும் தமிழ் மக்களாலேயே வீசி எறியப்படுவது தவிர்க்க முடியாதது.

ஆனால் நீங்கள் அனைவரும் வரவிருக்கும் இந்த புதிய நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். ஆகையினால் அதற்கு ஏற்ற வகையில் தமிழ் மக்கள் நம்பக் கூடிய விதமான நடவடிக்கைகளை அல்லது பிரச்சாரங்களை நீங்கள் முன்னெடுங்கள்.

குறிப்பாக தமிழ் மக்கள் இப்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கிற பொருளாதார, சமூக, அரசியல் சம்பந்தமான பிரச்சினைக்குக் கொள்கை ரீதியான விளக்கங்களைக் கொடுங்கள்.

அவ்வாறு விளக்கங்கள் மாத்திரமல்லாமல் அவை அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கான திட்டங்களை வகுங்கள். அந்த திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லுங்கள்.

அந்த திட்டங்களை உங்கள் கொள்கையாக வகுத்துக் கொண்டு அந்தக் கொள்கை பற்றிப் பேசுவீர்களாக இருந்தால் – அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பீர்களாக இருந்தால் – நிச்சயமாக தமிழ் மக்கள் உங்களை வரவேற்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆனால் இனிமேலும் இந்த நாட்டில் இனவாதம் மதவாதம் என்று கூறி தமிழர்களையும் சிங்களவர்களையும் முஸ்லிம்களையிம் பேகரையும் மலையகத்தையும் இனவாத அடிப்படையில் பிரித்து ஒதுக்குவதற்கு நீங்கள் முற்படுவீர்களாக இருந்தால் அது இனிச் செல்லுபடியாகாது என்பதையும் சொல்லிக் கொள்கிறோம்.




### பயங்கரவாத தடைச் சட்டம்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கொள்கைப் பிரகடனத்தில் பல விடயங்களை தெளிவாக அநுர வெளியிட்டிருக்கிறார். எங்கள் கொள்கைப் பிரகடனத்தில் மக்களுக்கு தேவையானவற்றையும் தேவையில்லாவற்றையும் கூட தெளிவாகக் கூறியுள்ளோம்.

இதனால் இப்போது சுமந்திரன் போன்றவர்கள் அல்லது வேறு யாரும் அப்படி, இப்படி கூறுகின்றார்கள் என்ற எந்தக் கதையும் தேவையில்லை. ஏனெனில் நிச்சயமாக இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ள பல்வேறு விடயங்கள் இருக்கிற போது இங்குள்ள தமிழ்க் கட்சிகள் இப்போது எங்கள் மீது பல்வேறு போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றார்கள்.

அதில் முதலாவதாக பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்கப் போவதில்லையாம் என்றும் அதனைப் பரிசீலனை செய்யப் போகின்றோமாம் என்றும் கூறுகின்றனர். இப்படியெல்லாம் இந்தச் சட்டம் பற்றி இப்பபோதுஇவர்கள் கூறினாலும் அது நீண்டகாலமாக இருந்து வருகிறது.

அந்த சட்டத்தால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நிச்சயமாக தமிழ் மக்கள் தான். ஆனால் கொண்டு வந்ததன் நோக்கம் தமிழர்களை மாத்திரமல்லாம் நாட்டிலுள்ள அனைவரையும் ஒடுக்குவதற்காகத்தான் உண்மையில் கொண்டு வரப்பட்டது.

அதனால் இதைக் கட்டாயம் ஒழிக்க வேண்டும். அதைத் தான் எங்கள் கொள்கைப் பிரகடனத்தில் கூட நாங்கள் முன்வைத்திருக்கிற எங்கள் கொள்கையாகும்.

ஆனால் அண்மையில் எங்களுடைய ஜாதிபதி அலுவலக சட்டத்தரணி இதனை என்னமோ மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறினார் எனவும், இதனால் இதனை நாங்கள் மீள்பரிசீலனை செய்ய மாட்டோம் என்று கருதி எங்கள் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்ற போக்கையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அவ்வாறு கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்ற நபர்களில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் சட்டத்தரணி சுமந்திரன் அவர்கள் முதன்மை ஸ்தானத்தை வகிக்கின்றார்.

சில தினங்களிற்கு முன்னர் கூட என்னையே என்னென்னவோ எல்லாம் சுமந்திரன் அவர்கள் சொல்லியிருக்கிறார். ஆக சுமந்திரன் அவர்களே நீங்கள் சட்டத்துறையில் மகா கெட்டிக்காரர்தான். அதனால் உங்கள் மீது எங்களுக்கு ஒரு மரியாதை இருக்கின்றது.

ஆனாலும் நாங்கள் பல தடவைகள் சொல்லுகின்ற ஒரு விடயத்தை நீங்கள் கொச்சைப் படுத்துவீர்களாக இருந்தால் அது உங்களுக்கு நல்லதல்ல.

அது மாத்திரமல்ல. நாங்கள் சொல்லுகின்றவற்றை நீங்கள் உங்கள் வாயால் திரிவு படுத்துவீர்களாக இருந்தால் அதுவும் நல்ல விடயம் கிடையாது.

ஏனென்றால் சுமந்திரன் அவர்களே? நாங்கள் இன்றைக்கு சொல்லில் மாத்திரமல்லாமல் செயலிலும் காட்டுகின்ற அரசாங்கமாகும். அதனால் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நாங்கள் நீக்குவோம் என்று உறுதி மொழி வழங்கியிருக்கின்றோம்.

எனினும் அதற்கு தனித்து நடவடிக்கை எடுக்க முடியாது என்பது நிச்சயமாக எங்களுக்குத் தெரியும். எதிர் வரும் தேர்தலின் பின்னர் கூடு கின்ற அந்த நாடாளுமன்றத்திலே நிச்சயமாக இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீக்கப்படுவதற்கான அல்லது இது போன்ற சட்ட மூலம் கொண்டு வரப்படுவதை இல்லாதொழிக்கின்ற நடவடிக்கையை எடுப்போம் என்று உங்களுக்கல்ல, மக்களுக்கு உறுதி அளித்திருக்கிறோம். அதை நாங்கள் நிச்சயம் செய்வோம்.

அதனால் சுமந்திரன் சொல்கிறார் அல்லது வேற ஆட்கள் சொல்லுகிறார்கள் என்று இது சம்பந்தமாக நாங்கள் கலக்கமடையவில்லை. ஏனென்றால் கடந்த 2015 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரைக்குமான நான்கரை வருடங்களாக ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாவலர்களாக அதுமாத்திரமல்லாமல் இவர்களது ஆதரவில்லாவிட்டால் தோல்வி என்ற நிலைமை இருந்தது.

அப்படியாக பேரம் பேசுகிற அதிகாரம் இருந்த போது இந்தச் சட்டங்களைப் பற்றி பேச முதுகெலும்பு இல்லாதவர்கள் – நடவடிக்கை எடுக்க வக்கில்லாதவர்கள் – இன்று எங்களைப் பார்த்து ஏதோ கூறுகின்றார்கள்.

அதனால் இந்த நாட்டு மக்களுக்கு நாங்கள் ஒரு விடயத்தை சொல்லுகிறோம். ஏனென்றால் இங்கிருக்கிற தமிழ்க் கட்சிகள் இன்று தீர்வு நாள் தீர்வு பொங்கலுக்கு, தீர்வு திபாவளிக்கு தீர்வு என்று சொல்லி சொல்லலிநே மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் யாரையும் ஏமாற்றவில்லை. சொல்வதை செய்து வருகிறோம். – என்றார்.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இன்னிசை விருந்து!

## வாராந்த உதவிகளும் வழங்கப்பட்டன

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் இடம்பெறும் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி அன்னசத்திரம் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

இதில் காரைநகர் கிழவங்காடு கலா மன்றத்தின் இசை அரங்கமும், திருவாசகக்குயில் லீலாவதி இராசரத்தினத்தின் பண்ணிசையும் இடம்பெற்றன.

இதேவேளை, உதவிகளாக, பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக 200 பயனாளிகளுக்கு தேவையான விவசாய உள்ளீடுகளுக்கான நிதியாக 40 ஆயிரம் ரூபா வழங்கிவைக்கப்பட்டது.

பண்டாரவளை கிரேக் தமிழ் மகா வித்தியாலயத்தின் பயன்பாட்டுக்காக 58 ஆயிரம் ரூபா பெறுமதியான அச்சு இயந்திரம் ஒன்று பாடசாலை அதிபர் எஸ்.சவுந்தரராஜனிடம் வழங்கப்பட்டது.

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத் தலைவர், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி அன்னசத்திரம் மோகனதாஸ் சுனாமிகளால் அவர் கலா மன்றத்திற்க்கு ஆற்றிக்கொண்டிருக்கும் சேவைக்காக கௌரவிக்கப்பட்டார்.

இந் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், நிர்வாகிகள், சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கல்முனை தொகுதிக்கு முகவர்

**(எம். எப். றிபாஸ்)**

திகாமடுல்ல மாவட்டத்தின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்முனைத் தொகுதிக்கான தேர்தல் முகவராக கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் நியமிக்கப்பட்டுள்ளார். அந்தக் கட்சியின் செயலாளர் சட்டமுதுமாணி நிசாம் காரியப்பரால் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.






# ஊடகத்துறைச் செயலமர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் ஊடகத்துறை தொடர்பில் ஆர்வ முடையவர்களுக்கான அறிவூட்டும் ஒரு நாள் செயலமர்வு இன்று (02) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.



கொழும்பை தலைமையகமாக கொண்ட அக்ரோ பல்வகை பயிர்செய்கை நிறுவனம் என்ற தனியார் துறை நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிறுவனத்தின் ஊடக ஆலோசகரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஜெயரஞ்சன் யோகராஜ் பிரதான வளவராக கலந்து கொண்டு செயலமர்வை நடத்தினார். 181 பங்குபற்றுனர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# கந்தப் பெருமானின் அருள்வேண்டி அனுஷ்டிக்கப்படும் கந்தசஷ்டி விரதம்!

அறியாமை என்கின்ற அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞானத்தை தருகின்ற பேரருளின் அருளை பெறுவதற்கு அனுஷ்டிக்கப்படும் கந்தசஷ்டி விரதம் இன்று (02) ஆரம்பமாகியது.

தமிழ் கடவுள், குழந்தை தெய்வம், கந்தன், திருக்கு மரன், வடிவேலன், ஆறுமுகத்தான், கார்த்திகேயன், கடம்பன், கதிர்வேலன் பாலகுமாரன், சண்முகன், செங்கல்வராயன் என உலக வாழ் சைவர்களால் அழைக்கப்பட்டு போற்றப்படும் சேவற் கொடியோன் முருகப் பெருமானின் அருளாட்சியில் மிக முக்கிய சம்பவமாக கருதப்படுவது சூரசம்ஹார நிகழ்வாகும்.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட முழுமுதற் கடவுள் சிவபெருமானால் சரவணப் பொய் கையில் ஆறு முகமாக தோன்றிய கலியுக வரதனே முருகப் பெருமான்.

கலியுகத்தின் ஆரம்பத்தில் அரக்கர்களால் தேவர்கள் சிறை பிடிக்கப்பட்டு துன்பப்படும் வேளை தேவர்களைக் காக்கச் சரவண பொய்கையில் துளிர்த்த ஆறு பெறிக ளும் பன்னிரு கைகளும் வேலவன் என கந்தபுராணம் கூறுகின்றது.

பிரம்மா தேவரின் புதல்வனான காசிபனின் மகன் அசுரர்களின் தலைவன் மாயை வடிவமாக பிறப்பு எடுத்த சூரபத்மன் சிவபெருமானிடம் சிவ-சக்தி இன்றி ஏனைய சக்திகளால் தன்னை அழிக்கமுடியாது என்று தவமிருந்து வரம் பெற்றான்.

பின்னர் தான் பெற்ற வரத்தை உபயோகித்து பல அரக்க அம்சங்களை உருவாக்கி அதர்மவழியில் ஆட்சி செய்து இந்திரன் முதலான தேவர்களை சிறை பிடித்து துன்பத்திற்குள்ளாக்கி சித்திரவதை செய்தான்.

இதன்போது வேதனை தாங்க முடியாமல் சிவபெருமா னிடம் முறையிட்டனர் தேவர்கள். சிவபெருமானின் அருளால் தோன்றிய முருகக் கடவுள் (கலியுக வரதன்) படைத்தளபதி வீரபாகுவுடன் சென்று சூரபத்மன் உள்ளிட்ட அவனது சகோதரர்களை வீழ்த்தி தேவர்களை காப்பாற்றி சம்பவமே சூரசம்ஹார நிகழ்வாகும்.

இதன்போது சூரபத்மமனின் சகோதரர்களான சிங்கமுகம் கொண்ட சிங்கமுகாசூரன், யானை முகம் கொண்ட தாரகாசூரன், மாயையினால் தலை கொய்ய கொய்ய மீண்டும் மீண்டும் தலைகள் தோன்றின எல்லாவற்றையும் அடக்கி தர்மத்தை காத்தான் வேலவன்.

கொடுங்கோலாட்சி செலுத்தி வந்த சூரனை ஆண வத்தின் வடிவமாகவும் அவனது சகோதரர்களாகிய சிங்கமுகாசூரனை கன்மத்தின் வடிவமாகவும், தாரகாசூரனை மாயையின் வடிவமாகவும் ஆணவம், கன்மம், மாயை போன்ற துர் சக்தி களை அழித்து இறை சக்தியை கலி யுகவரதன் முருகப் பெருமான் நிலை நாட்டினார்.



வடிவேல் டினேஸ்

ஆணவம், கன்மம், மாயை போன்ற மும் மலங்கயை யும் அடக்கி காமம், கோபம், பேராசை, தற் பெருமை, செருக்கு, மயக்கம் ஆகிய ஆறுவகை எதிரிகளை அழித்து தேவ குணங்களை நிலைநாட்டியது கந்தசஷ்டி என கந்தபுராணம் 'கந்தசஷ்டி' விரதத்தின் பெருமை யினை விளக்குகின்றது.

கந்தன் (முருகன்) அதர்மத்தை அழித்து தர்மத்தை காத்ததால் இது சைவர்களிடையே கந்தசஷ்டி விரதமாக வருடாவருடம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஆறு நாள்கள் நீடித்த சூரனை அழிக்கும் சம்ஹார யுத்தத்தில் இறுதியில் சூரன் கனிகளுள் முக்கனியாக திகழும் மாமரமாக உருவத்தை மாற்றிய போது முரு கன் மரத்தைத் தனது சக்தி வேலால் பிளந்தார் இவ்வாறு இரண்டாக பிளவு பட்ட மரத்தின் இருபாகத்தின் ஒன்று சேவலாகவும் மற்றொன்று மயிலாகவும் மாறியது இதன் போது முருகன் சேவலை கொடியாகவும் (சேவற் கொடியோன்) மயிலை வாகனமாகவும் (மயில்வாகனன்) ஏற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வின் பின்னணியிலே சைவர்களால் கந்தசஷ்டி விரதமானது அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆறு நாள்கள் இவ் விரதமானது வீட்டிலும், ஆலயங் களிலும் சைவர்களால் விரதாரம்ப நாள்களில் (ஐப்பசி, அல்லது கார்த்திகை) மாதங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

சஷ்டி என்றால் ஆறு கந்தனால் சூரனை அழிக்க இடம் பெற்ற சூரசம்கார நிகழ்வு ஆறு நாட்கள் இடம் பெற்றதால் கந்தசஷ்டி விரதம் ஆறு நாள்கள் கடைப் பிடிக்கப்படுகின்றது.

வீட்டில் நிறைகும்பம் வைத்து ஆலயத்துக்குச் சென்று பூசகரால் தெற்பை பெற்று உடல், உள சுத்தமாக பகல் வேளைகளில் உணவருந்தாமல் இரவில் பூசை செய்து வாழை இலை போட்டு (இரவு ஒரு வேளை மாத்திரம்) உணவருந்துவர்.

சிலர் பால் பழம் உண்ணுவர். இதில் விஷேசமாக மிளகு விரதம் இருப்பர். ஒரு நாள் ஒரு மிளவு இரண்டாம் நாள் இரண்டு மிளகு என்ற அடிப்படையில் இது கடைபிடிக்கப்படும்.

இறுதிநாளில் சஷ்டி அறும் (நிறைவடையும்) வரை உபவாசம் இருந்து விரதத்தை நிறைவு செய்வர். ஆல

தொடர்ச்சி ▼

# கந்தப் பெருமானின் அருள்வேண்டி அனுஷ்டிக்கப்படும் கந்தசஷ்டி விரதம்!

தொடர்ச்சி▲

யத்தில் தெற்பை பெற்றவர்கள் ஆலயம் சென்று தெற்பையை அகற்றுவர்.

இவ்வாறு முருகப்பெருமான் அதர்மத்தை அழித்த சூரசம்ஹார நிகழ்வின் போது எய்யப்பட்ட சக்தி வேலானது அகோரத்துடன் ஈழத்தில் காணப்படும் புண்ணியஸ்தலங்களில் தங்கியது அதில் ஒன்று தான் நாகார் முனை (தற்போது அம்பாறை மாவட்டம் திருக்கோவில்) அமைந்துள்ள வெள் நாவல் மரத்தில் இளைப்பாறிய வேலாகும்.

இதனை கண்ட வேடுவர்கள் அதற்கு கொத்துப்பந்தல் அமந்து பராமரித்து வந்தவேளை பக்தரின் வேண்டுகோளுக்கு இணங்க மேற்கு புறமாக அமைந்த கோவில் கிழக்கு புறமாக வங்க கடலை நோக்கி அமைந்தது.

ஆடிஅமாவாசை நாயகனாக தேசத்து ஆலயமாக சைவர்களால் பராமரிக்கப்பட்டு கம்பீரமாய் காட்சியளிக்கின்றது.

இவ்வாறு மகிமை பொருந்திய புண்ணியஸ்தலம் தான் அம்பாறை மாவட்டம் திருக்கோசில் ஸ்ரீ சித்ர வேலாயுத சுவாமி ஆலயமாகும்.

2024 கந்தசஷ்டி விரதமானது இன்று 02 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு 07 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும் சூரசம்கார நிகழ்வு மற்றும் 08 ஆம் திகதி இடம் பெறும் முருகன் தெய்வானை திருமண நிகழ்வுடன் இனிதே நிறைவு பெறும்.

கந்தசஷ்டி விரதததை முறையாக அனுஷ்டிப்போருக்கு இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி ஆகிய மூன்று சக்திகளுக்கும் தலைவனாகிய முருகப் பெருமானின் பேரளும் கிடைக்கும். இறுதிநாள் சஷ்டியன்று முருகனுக்கு அபிஷேகம் செய்யும் பாலை அருந்துவோருக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும் என்பது சைவர்களின் ஐதீகம்.





# நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் கனிஷ்ட அலுவலர்களுக்குப் பயிற்சி!

(பழுவூரான்)

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் இடம் பெற்ற பயிற்சிச் செயலமர்வானது மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையா ளர் சட்டத்தரணி எம்.பி.எம். சுபியானின் ஒழுங்குபடுத்தலில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று சனிக்கிழமை (02) இடம் பெற்றது.

கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடயங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் இதன் போது விரிவாகத் தெளிவூட்டப்பட்டது.






# போதையில் இருந்து இளையோரை பாதுகாக்க விளையாட்டுத் துறை தேவை

## தமிழ் தேசியக் கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் றொஜன்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளின் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க எதிர்காலத்தில் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தமிழ் தேசியக் கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் அ. றொஜன் தெரிவித்தார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்த தீபாவளி சிறப்பு நிகழ்வில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் அ. றொஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதன் போது குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இளைஞர்கள் மத்தியில் அதிகளவாக பாவனையில் போதைப் பொருள்கள் காணப்படுவதோடு, அவர்கள் வழி தவறிப் போகும் ஏனைய பிற நடவடிக்கைகளில் இருந்து அவர்களை பாதுகாக்க விளையாட்டு நிகழ்வுகள் மிக உறுதுணையாக அமைகின்றன.

எனவே எதிர்வரும் காலங்களிலும் இளைஞர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒவ்வொரு கழகங்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அவர்கள் தங்கள் கிராமங்களில் விளையாடுவதற்கு உரிய விளையாட்டு மைதானங்களைப் புனரமைத்தல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதை கருத்தில் கொண்டு போதை பாவனையை கட்டுப்படுத்த உங்களால் ஆன நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.





# பெருந்தோட்டப் பகுதிகளில் மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப்பேன்

## கண்டி வேட்பாளர் பாரத் அருள்சாமி

(க.கிஷாந்தன்)

கண்டி மாவட்டத் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது மக்களின் சொத்து, அந்த சொத்தை நிர்வகிப்பதற்கு உரிய பொறுப்பை என்னிடம் கையளிப்பதற்குக் கண்டி மாவட்ட மக்கள் தீர்மானித்துவிட்டனர். கண்டி மாவட்டத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள மக்களுக்குரிய காணி உரிமையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் பாரத் அருள்சாமி இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு அரசியல்வாதியின் வகிபாகமும் பொறுப்புக் கூறக் கூடிய குடிமகனும் என்ற தொனிப்பொருளில் கண்டி மாவட்டத்தின் சுதந்திரமான அரசியல் மன்றத்தின் ஏற்பாட்டில் கண்டி ஓக்ரே விருந்தகத்தில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துக் கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த செயலமர்வில் கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவூப் ஹக்கீம், அப்துல் ஹலீம், சன்ன கலப்பத்திகே, சமிந்திரானி கிரியெல்ல, பாரத் அருள்சாமி உள்ளிட்ட விரிவுரையாளர்கள், கல்விமான்கள் என பல முக்கியஸ்தர்களும் கலந்துக் கொண்டனர்.

பாரத் அருள்சாமி மேலும் தெரிவித்ததாவது,

கண்டி மாவட்டத் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது தமது தனிப்பட்ட சொத்து என சிலர் நினைத்துக் கொண்டுள்ளனர். இது தவறு. நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது மக்களின் சொத்து. அதனை நிர்வகிப்பதற்கே தற்காலிக பொறுப்பாளராக தமது பிரதிநிதிகளை மக்கள் நியமிக்கின்றனர். அந்த பிரதிநிதி சிறப்பாக செயற்பட்டால் மீள ஒப்படைப்பார்கள். இல்லையேல் வெளியேற்றுவார்கள். கடந்தமுறை பிரதிநிதி சரியாக செயற்படவில்லை, நம்பிக்கையைச் சீர்குலைத்துள்ளதால்தான் மக்கள் அந்த வாய்ப்பை எனக்கு வழங்கவுள்ளனர்.

2010 இல் எமது தலைவர் மனோ கணேசன் கண்டி மாவட்டத்துக்கு வந்து தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை மீட்க போராடினார். சூழ்ச்சிகள், வன்முறை அரசியல்மூலம் அவரால் இலக்கை அடைய முடியவில்லை. அன்று அவர் விதைத்த விதைமூலம்தான் 2015 இல் அறுவடை கிடைத்தது என்பதை மறக்கக்கூடாது.

மலையக மக்கள் முழுமையாக தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அதற்கு உரிய முயற்சிகளையே முன்னெடுத்து வருகின்றேன். எமது மக்கள் எல்லா விடயங்களிலும் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதை அனுமதிக்க முடியாது. விடிவை நோக்கி செல்வதற்கு உரிய ஏற்பாடாக காணி உரிமை வழங்கப்பட வேண்டும். காணி உரிமையை வழங்குவதற்கு உரிய வேலைத்திட்டத்தை 2020 இல் நான் ஆரம்பித்தேன். முதற்கட்டமாக ஆயிரம் வீடுகளுக்கு உரித்து வழங்கப்பட்டது. எனவே, இலக்கை நோக்கி பயணிக்கக் கூடிய வேலைத்திட்டம் எனக்கு உள்ளது.

குறிப்பாக கண்டி மாவட்டத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள மக்களுக்குரிய காணி உரிமையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். – என்றார்.



# இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விளையாட்டு விழா கல்முனையில்!

(ஆதம்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடத்தில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் டயக்கோனியா அமைப்பின் அனுசரணையில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஏற்பாடு செய்த விளையாட்டு திருவிழா (30) கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி. எம்.றிசாத் தலைமையில் இடம்பெற்ற இவ்விளையாட்டு விழாவில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் கௌரவ அதிதியாகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம்.முதர்ரிஸ் விசேட அதிதியாகவும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எயன் ஜப்பார், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் லைலா உடையார், நிதி உத்தியோகத்தர் குமுது பெரேரா ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட ஏழு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இவ்விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பாடசாலைகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினரால் இந்த நிகழ்வின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# துர்நாற்றம் வீசும் மருதமுனை கடற்கரை!

(பாறுக் ஷிஹான்)

ஊம்பல் என கூறப்படும் ஒரு வகையான மீனினங்கள் கரையொதுங்கி இறப்பதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட மருத முனை பகுதி கடற்கரை பகுதிகளில் துர்நாற்றம் வீசி வருகின்றது.

அண்மைக் காலமாகக் கிழக்கு மாகாண கடலில் கரையொதுங்கி வரும் ஊம்பல் மீன்கள் எனப்படும் மீன் இனங்கள் இறந்த நிலையில் அப்பகுதியில் கரை யொதுங்குவதால் இவ்வாறு துர்நாற்றம் வீசுகின்றது.

இதன் காரணமாக அந்தப் பகுதி மீனவர்கள் முதல் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண் டுள்ளனர்.

காலநிலை மாற்றம் மற்றும் கடலில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் காரணமாக இவ்வாறான மீன்கள் கரை ஒதுங்குகின்றன என்று மீனவர்கள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் இம்மீன் இனம் கடந்த பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்கு பின்னர் கரை ஒதுங்குகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முக்கிய பகுதிகளில் உள்ள கடற்கரை பிரதேசங்களில் இவ்வாறு மீனினங்கள் கரையொதுங்கி வருகின்றன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மீன் இனமே இவ்வாறு கரை ஒதுங்கி இறந்து கிடக்கின்றன.

நாவல் – கறுப்பு நிறம் கொண்ட மீன்கள் பல்லாயிரக் கணக்கில் இறந்து கரையொதுங்கியுள்ளன. 25 சென்றி மீற்றர் நீளமுள்ள இவ்வகை மீன் இனமானது அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் கலிபோர்னியாவில் இருந்து அலாஸ்கா வரை வாழ்கின்றன.

இவ்வகையான மீன் இனம் தங்களது இனத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக காலநிலை மாற்றங்களின் போது கற்பாறைகளினுள் இருந்து வெளிப்படுகின்றன.



பெரும்பாலும் இவை இரவு வேளைகளிலேயே கரைக்கு வருவது வழமை என்றும் இந்த மீன்கள் ஒரு வகையான இரைச்சல் சத்தத்தை ஏற்படுத்தக் கூடியவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப் பகுதிகளில் வாழும் இவ்வகையான மீன் இனம் சுமார் 15 வருடங்களுக்குப் பின்னர் கிழக்குக் கடற்கரை பகுதிகளில் கரை ஒதுங்குகின்றன என்று இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானங்கள் பிரிவு மற்றும் பிரயோக விஞ்ஞான பிரிவு தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எம். றியாஸ் அகமட் தெரிவித் துள்ளார்.

இந்த மீன் இனம் பற்றி உறுதியாக எதுவும் தெரியாததால் இதனை சாப்பிட வேண்டாம் என அங்கிருக்கும் மீனவர்கள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கரையொதுங்கியுள்ள மீன்களை, மீனவர்கள் மண்ணில் புதைத்து வருகின்றனர்.





# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தென் கிழக்கு நூலகத்துக்கு மாணவர்

(எம். எப். றிபாஸ்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழக நூலகத்துக்கு அட்டாளைச்சேனை அல் –முனீறா பெண்கள் உயர் பாட சாலையின் உயர்தர மாணவிகள் விஜயமொன்றை மேற்கொண்டிருந் தனர்.

பாடசாலையின் அதிபர் ஏ.சீ.நியா ஸின் வழிகாட்டலின் கீழ் பிரதி அதிபர் எம்.ரீ.எம்.சியாத், தலைமையில் பிரதிய திபர் ஏ.ஜே.எம். றினீஸ், நூலகக் கற்றல் வள நிலையப் பொறுப்பாசிரியர் கே.எல். எப். நப்லா மற்றும் ஆசிரியர்களான எம்.எச்.எம்.ஜிப்ரியா, கே. ஜெனீசியா, எம்.எஸ்.எம். பஸீல், எம்.ஐ. நஜீம் ஆகி யோருடன் குறித்த மாணவிகள் சென்று நூலகத்தைப் பார்வையிட்டனர்.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கை கள் சம்பந்தமாகப் பல்கலைக் கழக நூலகர் எம்.எம்.றிபாயுடன் "நூலகத் தின் செயல்திறன், ஆராய்ச்சி நுட் பங்கள்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தைப் பார்வையிட்ட மாணவர்கள் பேராசிரியர்களான எம்.எம்.பாஸில், எஸ்.எம்.அய்யூப் ஆகியோருடனும் கல்வியோடு தொடர்பான பல்வேறுபட்ட விடயங்களைக் கேட்டறிந்தனர்.



# கொள்கை என்று வந்துவிட்டால் அண்ணன் என்ன; தம்பி என்ன?

## விஜய்யை விமர்சித்தார் சீமான்



"தம்பி என்ற உறவு வேறு. கொள்கையில் முரண் என்பது வேறு. என்னைப் பெற்ற தாய் தந்தையராகவே இருந்தாலும், எங்களுடைய கொள்கைக்கு எதிராக இருந்தால், எதிரி எதிரிதான். நீ கடவுளே ஆனாலும் கொள்கைக்கு எதிராக வந்தால் எதிரிதான். இதில் அண்ணன், தம்பி என்று எதுவும் இல்லை."

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

சென்னையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாலகன் பாலச்சந்திரன் நெஞ்சில் ஐந்து குண்டுகளைத் தாங்கி மரணித்துக் கிடந்தபோது, பதறித்துடிப்பது தமிழ்த் தேசியம். அதேநேரம், சிறிதும் பதற்றம் இல்லாமல், பதவியேற்கும் திராவிடம். இரண்டும் ஒன்றா? திராவிடம் பெண்ணிய உரிமையைப் பேசும். ஆனால் தமிழ்த்தேசியம், பெண்ணிய உரிமையைக் கொடுக்கும், நிறைவேற்றும் . எனவே, இது இரண்டும் ஒன்று இல்லை. அப்படியிருக்கும்போது, எப்படி விஜய் இரண்டையும் தன்னுடைய கண் என்று கூறுவார்.

அதெப்படி சமம் ஆகும்? அதே போல், இருமொழிக் கொள்கை என்கிறார். அடுத்தவர்கள் மொழி எப்படி எனக்கு கொள்கை மொழியாக இருக்க முடியும்? ஆயிரக்கணக்கான பேரை அம்மா என்று அழைக்கலாம். ஆனால், பெற்றவள் ஒருத்திதான். அதனால் எனக்கு கொள்கை மொழி என்னுடைய தாய்மொழி. தெலுங்கு, கன்னடா, பிஹாரி என அவரவருக்கு அவர்களுடைய தாய்மொழிதான் கொள்கை மொழியாக இருக்க முடியும். விரும்பி நாங்கள் எந்த மொழியை வேண்டும் என்றாலும் கற்போம். உலக மொழிகளுக்கு எல்லாம் நாங்கள் பற்றாளர்கள். ஆனால், எங்கள் மொழிக்கு நாங்கள் உயிரானவர்கள்.

தமிழ்ப் பயிற்றுமொழி. ஆங்கிலம் கட்டாயப் பாடமொழி. இந்தி உட்பட உலகின் அனைத்து மொழிகளும் எங்களுடைய விருப்ப மொழி. விரும்பினால் கற்போம். மும்மொழிக் கொள்கை என்பது மோசடி கொள்கை. இருமொழிக் கொள்கை என்பது ஏமாற்றுக் கொள்கை. தமிழே எங்கள் மொழி என்பது தமிழ்த் தேசிய கொள்கை. திராவிடம் என்றால் என்ன? தமிழ்த்தேசியம் என்றால் என்ன? தவெகவைச் சேர்ந்த யார் இதற்கு விளக்கம் கூறுவார்கள்?

தம்பி என்ற உறவு வேறு. கொள்கையில் முரண் வேறு. என்னைப் பெற்ற தாய் தந்தையராகவே இருந்தாலும், எங்களுடைய கொள்கைக்கு எதிராக இருந்தால், எதிரி எதிரிதான். நீ கடவுளே ஆனாலும் கொள்கைக்கு எதிராக வந்தால் எதிரிதான். இதில் அண்ணன், தம்பி என்று எதுவும் இல்லை. ரத்த உறவை விட லட்சிய உறவுதான் மேலானது. எனவே, அண்ணன், தம்பி என்பது வேறு. கொள்கை என்று வந்துவிட்டால் பகைதான்." – என்றார்.

# இருதரப்பு உறவை வலுப்படுத்த கிரீஸ் பிரதமர் மோடியுடன் தொலைபேசியில் உரையாடல்

இருதரப்பு உறவை வலுப்படுத்த கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் உடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியும், கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ்-ம் தங்கள் நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மையை மேம்படுத்தும் நோக்கில் தொலைபேசி உரையாடலில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக பிரதமர் நரேந்திர



மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் உடன் ஆக்கிப்பூர்வமான தொலைபேசி உரையாடல் நடந்தது. இந்தியா – கிரீஸ் இடையேயான கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான எங்கள் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்தினோம்.

வர்த்தகம், பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்து மற்றும் இணைப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருக்கும் இந்தியாவின் மதிப்புமிக்க நண்பராக கிரீஸ் உள்ளது." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# நாகை - இலங்கை கப்பல் சேவை ஐந்து நாள்களாக அதிகரிக்கப்படும்

நாகப்பட்டினம் – இலங்கை காங்கேசன் துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து இனி வாரத்தில் 5 நாள்களுக்கு இயக்கப்படும் என கப்பல் போக்குவரத்து நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி நாகை – இலங்கை இடையே சிவகங்கை என்ற பயணிகள் கப்பல் சேவை தொடங்கியது. முதலில் தினந்தோறும் இரு மார்க்கத்திலும் இயக்கப்பட்ட நிலையில் பயணிகள் முன்பதிவு குறைவாக இருந்ததால் வாரத்தில் செவ்வாய், வியாழன், ஞாயிறு மூன்று நாள்களாக குறைக்கப்பட்டு இயக்கப்பட்டது. அதன் பின்னர் சனிக்கிழமை உட்பட்ட 4 நாள்களாக நீட்டிக்கப்பட்டது. இது பயணிகளிடையே நல்ல வரவேற்பை பெற்று முன்பதிவும் அதிகரித்துள்ளது.



அதைத்தொடர்ந்து இனி வாரத்தில் 5 நாள்கள் கப்பலை இயக்க கப்பல் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதன்படி பயணிகள் வசதிக்காக எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் வெள்ளிக் கிழமைகளிலும் கப்பல் போக்குவரத்து சேவை இருக்கும் என 'சிவகங்கை' கப்பல் போக்குவரத்து நிறுவனம் அறிவித்துள்ளது.






# ஸ்பெய்ன் வெள்ளத்தால் 200 பேர் உயிரிழந்தனர்

ஸ்பெய்னில் பல தசாப்தங்களின் பின்னர் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் காணாமல் போனவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வெள்ளத்தினால் வெலென்ஸியாவில் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், உயிரிழப்புகள் தொடர்ந்தும் அதிகரிக்கும் சாத்தியமுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் ஏற்பட்டு சில மணித்தியாலங்களுக்கு பின்னரே அதிகாரிகளினால் முன்னெச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.





# ஹமாஸ் – இஸ்ரேல் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் தொடர்ந்தும் சிக்கல்



அமெரிக்க தலையீட்டில் ஹமாஸ் – இஸ்ரேல் இடையிலான போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் தொடர்ந்தும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தினால் நேற்று காஸா பிராந்தியத்தில் பாரிய வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது,

இந்த தாக்குதலில் 64 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக ஹமாஸ் – இஸ்ரேல் இடையிலான போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த அமெரிக்க அதிகாரிகள் நடவடிக்கை முன்னெடுத்திருந்தனர்.

எவ்வாறாயினும் இஸ்ரேல் தாக்குதலுக்கு மத்தியில் ஹமாஸ் அமைப்பினர் போர் நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 02

கனடா முரசு

சனிக்கிழமை 02/11/2024

## ஒன்றாறியோ மாகாணத்தில் 200 மோசடி சம்பவங்கள்

வீடு வீடாக சென்று பொருள்கள் விற்பனை செய்யும் போர்வையில் மக்கள் ஏமாற்றப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாறியோ மாகாணத்தில் இவ்வாறான 200 இற்கும் மேற்பட்ட மோசடி சம்பவங்கள் 02▶



# பாடசாலை மீது துப்பாக்கிச் சூடு நடத்துவேன் என மிரட்டிய சிறுமி

**கனடாவில் பாடசாலை மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதாக மிரட்டியதாக 15 சிறுமி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

**கனடாவின் அஜாக்ஸில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதாக சிறுமி அச்சுறுத்தல் விடுத்துள்ளார். கடந்த புதன்கிழமை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.**

**பேராயர் டெனிஸ் ஒகானர் கத்தோலிக்க உயர்நிலைப் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதாக எச்சரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.**

ஸ்னாப்சாட் இடுகை ஒன்றின் மூலம் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சிறுமியின் வீட்டை சோதனையிட்ட போது, ஆயுதங்கள் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் தெரிந்தால் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.





# கத்திக்குத்துச் சம்பவம் பெண்ணொருவர் கைது!

கத்தி குத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நோர்த் யோர்க் பகுதியில் இந்த கத்தி குத்துச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

ஜேன் மற்றும் வில்சன் வீதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள குடியிருப்புத் தொகுதியொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் நபர் ஒருவர் காயமடைந்துள்ளார் என தெரிவிக்கப் படுகின்றது. காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் மீது எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.








# கனடாவில் சட்டவிரோத ஆள்கடத்தல் அதிகரிப்பு

கனடாவில் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

கடந்த ஒரு தசாப்த காலமாக சட்டவிரோத ஆக்கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விவரவியல் திணைக்கள தகவல்களின் பிரகாரம் இந்த விடயம் உறுதியாகி உள்ளது.

கனடாவில் பதிவான சுமார் அரைவாசிக்கும் மேற்பட்ட சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுக்கு இது வரையில் தீர்வு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிராத ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்துவதில் பல்வேறு சவால்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அநேகமான சம்பவங்கள் இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுமார் 4500 சட்டவிரோத ஆள் கடத்தல் நடவடிக்கைகள் பதிவாகியுள்ளன.

# சொக்லெட்டில் காணப்பட்ட பிளேட்

கனடாவில் சொக்லெட் ஒன்றிலிருந்து பிளேட் மீட்கப் பட்டுள்ளது.

வடக்கு ஒன்றாரியோவில் சிறுமி ஒருவர் வழங்கப்பட்ட சொக்லெட்டில் இவ்வாறு பிளேட் மீட்கப்பட்டுள்ளது.

ஹலோவின் கொண்டாட்டங்களுக்காக வழங்கப்பட்ட சொக்லெட்டில் இவ்வாறு பிளேட் காணப்பட்டுள்ளது.

இந்த சொக்லெட் எங்கிருந்து கிடைக்கப் பெற்றது என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

பிரபல நிறுவனமொன்றின் சொக்லெட் வகையொன்றில் இவ்வாறு பிளேட் காணப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிள்ளைகளுக்கு வழங்கப்படும் இனிப்பு பண்டங்களை பெற்றோர் தீவிரமாக கண்காணிக்க வேண்டுமென அறி




விக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான வகையில் எதாவது இருந்தால் அவ்வாறான இனிப்பு பண்டங்களை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஒன்றாறியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெற்றுள்ளன.

வீடு வீடாக சென்று பொருள்கள், சேவைகளை விற்பனை செய்யும் போர்வையில் மக்களை ஏமாற்றி மோசடி செய்த குற்றச்சாட்டில் இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீடுகளுக்கு சென்று வீடுகளை புனரமைப்பதாக கூறியும் இவ்வாறு பணம் மோசடி செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் உதவிகளின் அடிப்படையில் வீடுகள் புனரமைக்கப்படும் எனக் கூறி இந்த மோசடிகள் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டு உரிமையாளர்களுக்கு தெரியாமலே வீட்டை பயன்படுத்தி வீட்டு ஆவணங்களை பயன்படுத்தி மோசடிகள் இடம் பெறுவதாகவும் இவ்வாறு மோசடிகளில் சிக்கும் சிலர் தங்களது வீடுகளை இழக்க நேரிடுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து பொதுமக்கள் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.